முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம்.

SC.No. 47/2023

நாள் 23.06.2025

( 2 முதல் 4 எதிரிகள் ஆஜர். )

(1 வது எதிரி இறந்துவிட்டார்)

அ.த.சா. 8 திரு. சாகுல் ஹமீது என்பவரை மீண்டும் அழைத்து விசாரிக்க மனு தாக்கல் செய்து கு.ப.மனு எண்.02/2025 16.04.2025 ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி இன்று மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பணி சம்மந்தமாக நெடுஞ்சாலை ரோந்துப்பணிக்கு செல்லும்போது பணியில் எங்கெங்கு சென்றேன் என்பதை பாக்கெட்டைரியில் எழுதவேண்டும் என்றால் வேண்டியதில்லை. அன்றைய தினம் இரவு 08.00 மணியளவில் பணிக்கு சென்றேன். அன்றைய தினம் எந்தெந்த இடங்களில் ரோந்துப்பணியில் இருந்தேன் என்பதை எதன் மூலம் தெரிந்து கொள்ளலாம் என்றால் பொது நாட்குறிப்பில் தெரிந்து கொள்ளலாம். அன்றைய தினம் நான் ரோந்துப்பணியில் இருந்த விவரங்களை பொதுநாட்குறிப்பில் நான் குறித்து வைத்துள்ளேன்.

வெங்கடேசன் என்பவரை க்ரைம் பார்ட்டி துறத்திச்சென்று பிடித்தார்கள் என்றும், அப்போது அவர் இருசக்கர வாகனத்தில் இருந்து விழுந்தார் என்றால் துறத்தி சென்றது தெரியும். விழுந்தது தெரியாது. அவ்வாறு துறத்திச்சென்றபோது, வெங்கடேசன் சார்பு ஆய்வாளரை கத்தியால் தாக்க முயற்சி செய்தார் என்றும், அதனால் சார்பு ஆய்வாளர் வெங்கடேசன் இடம் இருந்து கத்தியை பிடுங்கினார் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. இறந்துபோன வெங்கடேசன் Crime Accused என்ற விவரம் எனக்குத் தெரியாது.

03.10.2012 ம் தேதிக்கு முதல் நாள் இரவு காக்காத்தோப்பு பகுதியில் வெங்கடேசனுக்கும் மற்றொரு நபருக்கும் தகராறு ஏற்பட்டது என்ற விவரத்தை நான் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. வழக்கு சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை துறை ரீதியாக விசாரித்தாரா என்றால் இல்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் மற்றும் போலிஸ் அதிகாரிகள் பரமக்குடி நீதித்துறை நடுவரிடம் விசாரணையின் போது வாக்குமூலம் கொடுத்த விவரம் எனக்குத் தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக நான் நீதிமன்றத்தில் நீதித்துறை நடுவர் முன்பு ஏன் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் எனக்கு தகவல் தெரிவிக்கவில்லை. அதனால் நான் வாக்குமூலம் அளிக்கவில்லை.

எனக்கு ரோந்துப்பணி என்பது தேசிய நெடுஞ்சாலையில் செல்ல வேண்டும் என்றால் சரிதான் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து காந்தி சிலை 100 மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு தேசிய நெடுஞ்சாலையிலிருந்து ஊருக்குள் செல்வதற்கு நான் உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. நான் காந்திசிலைக்கு எந்த திசையில் வெங்கடேசனை பார்த்தேன் என்றால் காந்திசிலைக்கு அருகில் ரோட்டில் பார்த்தேன். காந்திசிலையின் முகப்பு தெற்குபக்கம் நோக்கி உள்ளது. காந்திசிலைக்கு வடக்குப்பக்கம் வெங்கடேசனை பார்த்தேன். அப்போது அவர் என்ன நிற உடை அணிந்திருந்தார் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. க்ரைம் போலிஸ் டெம்போ எத்தனை மணிக்கு அங்கு வந்தது என்றால் அதிகாலை 03.40 மணியளவில் வந்தது.

நான் வெங்கடேசனை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், அதனால்தான் அது சம்மந்தமாக எந்த விவரங்களையும் நீதித்துறை நடுவர் விசாரணையில் சொல்ல முன்வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. கடந்த 03.10.2012 ம் தேதி போலிசார் இறந்துபோன வெங்கடேசனை துறத்தியபோது இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்று, நிலை தடுமாறி கீழே விழுந்ததில்

தலையில் காயமும், தற்காப்பிற்காக தன்னை குத்த வந்த வெங்கடேசனை சார்பு ஆய்வாளர் முனியசாமி லத்தியால் தாக்கியதில் காயங்களும் ஏற்பட்டிருந்தன, இந்த விவரங்களை வெங்கடேசனை நான் நேரில் பார்க்காததால் அவற்றை என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் எனது முதல் விசாரணை சொன்ன மறியல் செய்த விவரம் குறித்தும் இறந்துபோனவர்களின் இறப்பு சம்மந்தமாக அவர்களிடம் கேள்விப்பட்டதாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/ஏ.கே.மெக்பூப் அலிகான்,
முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .